# சிறுவர் பாதுகாப்புக் கொள்கை

## அறிமுகம்

எமது பாடசாலை செயற்பணி மற்றும் விழுமியங்களின் பிரகாரம் வயதினைக் கவனத்திற் கொள்ளாது ஒவ்வொரு சிறுவர் மற்றும் இளம் ஆட்கள் எல்லா நேரத்திலும், எல்லா நிலைமைகளிலும் பாதுகாப்பாகவும், பாதுகாக்கப்படுவதாகவும் உணருவதற்கு உரிமையுள்ளது என்பதுடன் பாதிப்பிலிருந்து பாதுகாக்கவும், பாதுகாக்கப்படவும் நாம் ஈடுபடுத்தப்படுகின்றோம் என OSC நம்புகின்றது. OSC சமூக உறுப்பினர்கள் மற்றும் எமது வளாகத்திற்கு வருகைதருவோர் அனைவரும் பாதுகாக்கப்படுவதாக எண்ணும் பின்வரும் வழிகாட்டல்களை வாசிப்பதற்காக சிறிது நேரத்தை தயவுடன் ஒதுக்கவும். OSC இன் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் நடவடிக்கை முறைகள் உள்ளடக்கும் விடயங்கள்: மாணவர் நலன்; கொடுமைப்படுத்துதல்; துன்புறுத்தல் மற்றும் இழிவான நடாத்துகை; உடல் சார் தலையீட்டுப் பயன்பாடு/ பாதுகாப்பான கையாளுகை; மாணவர்களது தனிப்பட்ட ரீதியான உடலியல், உளவியல் அல்லது மருத்துவ தேவைகளை அடைதல்; போதைப் பொருள் மற்றும் தவறான பொருட்பயன்பாடு; கல்வி சார் பயணம்; உறவுமுறை, உடல் பாதுகாப்பு மற்றும் விரிவான பாலியல் கல்வி; இணையவழிப் பாதுகாப்பு; பாடசாலை ஆய்வுப் பயணத்தின் போது மாணவர்கள் மற்றும் கற்போரது நலன்புரி விடயங்கள்; மற்றும் பாதுகாப்பான ஊழியர் தெரிவு முறைகள்.

## பாதுகாப்புக் கொள்கைக் கூற்று

ஓவர்சீஸ் ஸ்கூல் ஒப் கொழும்பு (Overseas School of Colombo) பாதிப்பிலிருந்து மாணவர்களை பாதுகாக்கவும், மாணவர்கள் பாதுகாக்கப்படுவதற்கும் ஈடுபடுத்தப்படுகின்றது. எமது பாதுகாப்பு வரைவிலக்கணமானது துஸ்பிரயோகம் மற்றும் கவனயீனம் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கின்ற செயன்முறை, சிறுவர்களின் ஆரோக்கியத்தின் அல்லது விருத்திப் பாதிப்பின் இடர் தடுப்புச் செயன்முறை மற்றும் பாதுகாப்பு, ஆதரவுடனான பராமரிப்பு ஆகிய ஏற்பாடுகளுடன் பிள்ளைகள் வளருகின்றனர் என்பதை உறுதிப்படுத்தும் செயன்முறை ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

## பாதுகாப்புக் கொள்கையின் காரணவிளக்கம்

எமது பாடசாலையின் "எமது கற்போர் சமூகத்தைப் பேணி வளர்த்து மேம்படுத்தல் மற்றும் முழு ஆளினையும் விருத்தி செய்தல்" எனும் செயற்பணிக்கு இணைந்த வகையில், சிறுவர் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு ஆகிய விடயங்களில் எமது ஊழியர்கள் மற்றும் குடும்பங்களிற்கு வழிகாட்டுவதற்கு இச் சிறுவர் பாதுகாப்புக் கொள்கையை OSC அமுல்படுத்துகின்றது. இவ் OSC இன் சிறுவர் பாதுகாப்புக் கொள்கையானது சிறுவர் பாதுகாப்பு மீதான சர்வதேச விசேட அதிரடிப்படை, சர்வதேச சட்டம் மற்றும் 1991 ஆம் ஆண்டில் இலங்கை ஒப்பமிட்டிருக்கும் *சிறுவர் உரிமை மீதான ஐக்கிய நாடுகள் சமவாயம்* ஆகியவற்றின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதன் பிரதான இரு உறுப்புரைகள் பின்வருமாறு:

## உறுப்புரை 19 - துஸ்பிரயோகம் மற்றும் கவனயீனத்திலிருந்து பாதுகாப்பு

சிறுவர் பராமரிப்பிற்குப் பொறுப்பான பெற்றோர் அல்லது வேறு ஆட்களினால் ஏதேனும் வகையான கொடுமையான நடத்துகையிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்தல் வேண்டும் என்பதுடன் துஸ்பிரயோகத்தைத் தடுப்பதற்கும் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காகவும் தெளிவான சமுக நிகழ்ச்சிகளை அரசு தாபித்தல் வேண்டும்.

## உறுப்புரை 34 - பாலியல் சுரண்டல்

விபச்சாரம், ஆபாசப்படத்தில் ஈடுபடல் அகியன உள்ளடங்கலாக பாலியல் சரண்டல் மற்றும் துஸ்பிரயோகத்திலிருந்து அரசு சிறுவர்களைப் பாதுகாத்தல் வேண்டும் (சிறுவர் உரிமைகள் சர்வதேச வலையமைப்பு).

## பாதுகாப்புக் கொள்கையின் எதிர்பார்ப்புகள்

OSC ஆனது வருடாந்தம் இக் கொள்கையினை அனைத்துக் குடும்பங்கள் மற்றும் விண்ணப்பதாரர்கள் ஆகியோருக்கு விநியோகிக்கும், வருடாந்தம் இக் கொள்கை பற்றிய தொடர்பாடலை மாணவர்களிடம் மேற்கொள்ளும், அனைத்து ஊழியர்களுக்குமான வருடாந்த பயிற்சியினை வழங்கும், மற்றும் OSC பிள்ளைகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு பணிக்கமர்த்தல் நடைமுறைகளை அமுல்படுத்துவதற்கான ஒவ்வொரு முயற்சியினையும் மேற்கொள்ளும். குற்றம் சாத்தப்பட்ட குற்றவாளியாக ஊழியர் ஒருவரினால் அறிக்கை செய்யப்படும் விடயங்களில் ஓவர்சீஸ் ஸ்கூல் ஒப் கொழும்பு (Overseas School of Colombo) உரிய செயன்முறையில் கவனமாக வடிவமைக்கப்பட்ட கற்கைநெறியினைப் பின்பற்றி முழுப் புலனாய்வினை நடாத்தும். அனைத்துத் தனிநபர்கள் மற்றும் குழுக்களை பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து ஒருங்கிணைப்புடன் செயற்படுவதற்கும், மாணவர்களின் பாதுகாப்பிற்காக பொறுப்புடன் செயற்படுவதற்கும் OSC எதிர்பார்க்கின்றது. இக் கொள்கையானது ஊழியர்கள், சேவை மற்றும் செயற்பாட்டுப் பங்காளர்கள், தன்னார்வத் தொண்டர்கள், ஒருங்கிணைந்த முகவர்கள், தொழிற்பயிற்சியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அதிதிகள், பெற்றோர், காவற் பொறுப்பாளர்கள், மற்றும் விருந்தினர்கள் உள்ளடங்கலாக பாடசாலைச் சமூகத்துடன் தொடர்பிலுள்ள அனைவரையும் பிணிக்கும். இவ் எதிர்பார்ப்புகளுக்கிணங்க OSC இன் விண்ணப்பதாரர்கள் கடந்தகால தொழில்தருநர்களுடனான எழுதுவினைஞர்கள் உள்ளடங்கலாக இப் பதவிக்குப் பொருத்தமான சிறுவர் பாதுகாப்புச் சோதனைக்கு உட்படுத்தப்பட விருப்பமுடையவராக இருத்தல் வேண்டும். OSC இன் குடும்பங்கள் பாடசாலையுடன் பங்காண்மையில் வேலை செய்வதற்கும் மற்றும் OSC இன் சபையினால் ஏற்கப்படும் கொள்கைகளைக் கடைப்பிடிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றனர். அனைத்து OSC ஊழியர்களும் எமது மாணவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பினை வழங்குவதற்கு அப் பங்காண்மையுடன் இணைந்து செயற்படுவர். இதற்கான காரணம் OSC இன் மாணவர்கள் அனைவரும் எல்லா வேளைகளிலும் மரியாதையுடனும், கண்ணியத்துடனும் நடாத்தப்படுவதன் மூலமாக தரநிலையினை வரையறுக்கும் பாதுகாப்புக் கொள்கையொன்றை OSC புறக்குறிப்புரையிட்டுள்ளது என்பதாகும்.

## வரைவிலக்கணங்கள் மற்றும் விளக்கங்கள்

**சிறுவர்** : *சிறுவர் உரிமை மீதான ஐக்கிய நாடுகள் சமவாயம்* 18 வயதிற்கு உட்பட்ட நபரை சிறுவராக வரைவிலக்கணப்படுத்துகின்றது, OSC இல் பாடசாலை மாணவர்கள் அல்லது இப் பாடசாலைக்கு வருகைதரும் எவரேனும் பிள்ளையை *சிறுவர்* என வரைவிலக்கணப்படுத்துகின்றோம். சொந்த சூழ்நிலைகளின் காரணமாக ஏனையோரை விட எமது பாடசாலைச் சமூகத்தின் சில உறுப்பினர்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள் என நாம் அடையாளங்காணுகின்றோம்.

**சிறுவர் துஸ்பிரயோகம்** என்பது சிறுவர் அல்லது இளம் நபர் மீது டிஜிட்டல் அல்லது வேறுவகையாக துன்புறுத்தப்படும் கொடுமைகளின் பல்வேறுபட்ட வகைகளை விபரிக்கப் பயன்படுத்தப்படும் சொல்லாகும்.

**சிறுவர் பாதுகாப்பு** என்பது பாதுகாப்புச் செயன்முறையின் ஒரு பகுதியாகும். துஸ்பிரயோகம் பற்றிய அக்கறையுள்ள இடங்களில் தனிப்பட்ட சிறுவர்களைப் பாதுகாப்பதில் இது கவனஞ் செலுத்தப்படுகின்றது. சிறுவர் பற்றிய அக்கறைக்கு எவ்வாறு பதிலளிக்க வேண்டும் எனும் விளக்கத்தைக் கொண்ட நடைமுறைகளை சிறுவர் பாதுகாப்பு உள்ளடக்குகின்றது.

**பாதுகாப்பளித்தல்** என்பது வெறுமனே உள்நோக்கத்துடனான பாதிப்பிலிருந்து மாணவர்களைப் பாதுகாப்பது பற்றியதல்ல; நலன்புரி விடயங்கள் மற்றும் நாம் அனைத்துச் சிறுவர்களுக்கும் என்ன செய்கின்றோம் என்பனவற்றுடன் தொடர்புடையதாகும். பாதுகாத்தல் என்பது துஸ்பிரயோகம் மற்றும் கவனயீனத்திலிருந்து பாதுகாத்தல், சிறுவர்களின் ஆரோக்கியம் மற்றும் விருத்திக்கு பாதிப்பளிப்பவற்றிலிருந்து பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பு, வினைத்திறனான பராமரிப்பு ஆகிய ஏற்பாடுகளுடன் சிறுவர்கள் வளர்வதை உறுதிசெய்தல் ஆகிய செயன்முறைகளை உள்ளடக்குகின்றது.

OSC ஆனது பல்வேறுபட்ட நம்பிக்கைகள், விழுமியங்கள், செயன்முறைகள் ஆகியவற்றுடன் பல்வேறான கலாச்சாரங்களைக் கொண்ட சமூகமொன்றாகும். அனைத்து நம்பிக்கைகளுக்கும் மரியாதை செய்யும் பொருட்டு உலக சுகாதார அமைப்பின் துஸ்பிரயோகம் பற்றிய வரைவிலக்கணத்தினை நாம் தழுவுகின்றோம்:

> *சிறுவர் துஸ்பிரயோகம் அல்லது கொடுமைப்படுத்தல் அனைத்து வடிவங்களிலுமான உடல் அத்துடன்/ அல்லது உணர்வு ரீதியான தவறான நடத்துகை, பாலியல் துஸ்பிரயோகம், கவனயீனம் அல்லது கவனயீன நடாத்துகை, அத்துடன் பொறுப்பு, நம்பிக்கைப் பொறுப்பு அல்லது தத்துவம் ஆகிய உறவுமுறை விடயத்தில் சிறுவரின் ஆரோக்கியம், உயிர் வாழ்தல் அல்லது கண்ணியம் ஆகியவற்றுக்கு உண்மையான அல்லது சாத்தியமான பாதிப்பினை ஏற்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது (உ.சு.அ).*

ஆளொருவர் பாதிப்பினை ஏற்படுத்துவதன் மூலம் அல்லது பாதிப்பிலிருந்து தடுப்பதற்கான செயலைச் செய்ய தவறுவதன் மூலம் சிறாரொருவரைத் துஸ்பிரயோகம் செய்யலாம். சிறுவர்கள் குடும்பத்தில் அல்லது பாடசாலையில்

அல்லது சமூக அமைப்பில் துஸ்பிரயோகம் செய்யப்படலாம். சிறுவர்கள் அவர்களுக்குத் தெரிந்த தனிநபர்கள் அல்லது மிகவும் அரிதாக தெரியாத நபரொருவரினால் துஸ்பிரயோகத்திற்கு உட்படலாம். வழக்கமாக சிறுவர் துஸ்பிரயோகமானது சிறுவர்களுக்குத் தெரிந்தவர்கள், மரியாதைக்குரியவர்கள், நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் ஆகிய எவரேனுமாளினால் மேற்கொள்ளப்படுகின்றது. உத்தியோகத்தர்கள் எமது சிறுவர்களைச் சுற்றியுள்ள தனியாட்கள் தொடர்பாகவும், சூழ்நிலைகளுக்கு பதிலளிக்கும் எமது திறன் தொடர்பாகவும் சர்வதேச பாடசாலையொன்றின் தனித்துவப் பண்புகள் பற்றிய விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும். பாடசாலை உத்தியோகத்தர்கள் சிறுவர்கள் தாம் அனுபவித்திருக்கக்கூடிய துன்புறுத்தல் வகைகள் பற்றிப் பேச இயலும் என்பதை உணராமைக்கான சாத்தியமான காரணங்கள் பற்றிய அறிவைக்கொண்டிருத்தல் வேண்டும்.

சிறுவர் துஸ்பிரயோகமானது தற்செயலான உடற் காயம், கவனயீனம், பாலியல் துஸ்பிரயோகம் மற்றும் உணர்வு அல்லது உளவியல் துஸ்பிரயோகம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. அதன் தீவிர வடிவங்களில், சிறுவர் அல்லது இளம் நபரின் உடல் அல்லது உணர்வு ரீதியான நல்வாழ்விற்கு மரணத்தை அல்லது வளர்ச்சிப் பாதிப்பை துஸ்பிரயோகங்கள் ஏற்படுத்தக்கூடியன. OSC ஆனது இந் நான்கு வகை துஸ்பிரயோகங்கள் மற்றும் அவ் ஒவ்வொரு வகையிலும் இணைந்துள்ள உடல் மற்றும் நடத்தை ரீதியான அறிகுறிகள் மீது கவனஞ் செலுத்துகின்றது.

## துஸ்பிரயோக வரைவிலக்கணங்கள்

**உடல் ரீதியான துஸ்பிரயோகம்** பொதுவாக தலையீட்டினால் அல்லது தலையீட்டுக் குறைபாட்டினால் உண்மையான அல்லது சாத்தியமான உடற் பாதிப்பை விளைவிக்கின்றதும், அத்துடன் பெற்றோர் அல்லது பொறுப்பு, தத்துவம், அல்லது நம்பிக்கைப் பொறுப்பு ஆகிய நிலையிலுள்ள நபர் ஆகியோரின் கட்டுப்பாட்டினுள் நியாயமாக உள்ள பிள்ளைக்கு எதிராக தற்செயலாகப் பயன்படுத்தப்படும் உடல் பலத்தினைக் குறிப்பீடு செய்கின்றது. அது ஒரு தடவை அல்லது மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்பட்ட சம்பவங்களாக இருக்கலாம். உடல் ரீதியான துஸ்பிரயோகமும் மட்டுப்படுத்தாது உட்படுத்தப்படுகின்றன:

| | | | | |
|---|---|---|---|---|
| கடித்தல் | எரித்தல் | மூழ்குதல் | அடித்தல் | உதைத்தல் |
| நஞ்சூட்டல் | குத்துதல் | தள்ளுதல் | குலுக்குதல் | கடுமையாகத் தள்ளுதல் |
| அறைதல் | துப்புதல் | நெரித்தல் | மூச்சுத் திணறுதல் | வீசுதல் |

- முடி கிழிக்கப்பட்ட வழுக்கைத் திட்டுகள்
- வெவ்வேறு வயது அல்லது வண்ணங்களினாலான காயங்கள்
- உணர்வு மற்றும் / அல்லது நடத்தையில் ஏற்படும் மாற்றங்கள்

- அதிக ஆக்ரோஷம் அல்லது பின்வாங்குகை
- வீட்டிற்குச் செல்ல அல்லது எவரேனும் வீட்டிற்கு அழைத்தால் பயம்
- குழந்தை கொடுத்த தகவலுடன் பொருந்தாத காயங்கள்
- ஒரு விடயத்தின் வடிவத்தைப் பிரதிபலிக்கும் காயங்கள்
- காயம் மறைந்த பின் வழமையாகத் தேன்றும் காயங்கள்
- எதிர்பாராமல் தொட்டால் பின்வாங்கல்
- குறைவான தூக்க முறை மற்றும் அடிக்கடியான கனவு
- ஞாபகம் மற்றும் கவனக் குறைவு
- உடலின் எந்தப் பகுதியிலும் விவரிக்கப்படாத காயங்கள், வெட்டுக்கள், எலும்பு முறிவுகள் அல்லது வீக்கங்கள்
- விவரிக்கப்படாத எரிகாயங்கள்

**இதிலுள்ள குறிகாட்டிகள் அல்லது அவை தாமாகவே துஸ்பிரயோகத்தையோ அல்லது கவனயீனத்தையோ உள்ளடக்காது. ஏனைய குறிகாட்டிகளுடன் இணைந்தும், அவற்றுடன் தொடர்புபட்டும் அவர்களின் பரிந்துரைகளுக்கு உத்தரவாதமளிக்கப்படலாம்*

உணர்வு சார்/ உளவியல் சார் துஸ்பிரயோகம் உடலல்லாத வளர்ப்பு, உணர்வு ரீதியான ஒத்துழைப்பு, அல்லது கிடைக்கத்தகு தன்மை ஆகியவற்றை பிள்ளைக்கு வழங்குவதில் பெற்றோர் அல்லது பராமரிப்பை வழங்குபவரின் தேல்வி முறையினைக் குறிப்பீடு செய்கின்றது. பிள்ளையின் உணர்வு ரீதியான நல்வாழ்வுடன் தொடர்புபடாத தொடர்ச்சியானதும், காயத்தினை விளைவிக்கக்கூடியதுமான வாய்மொழி மூல மற்றும் உணர்வு ரீதியான துஸ்பிரயோகத்திற்கு பிள்ளை உட்படுத்தப்படும் நடத்தை முறையாகும். உணர்வு/ உளவியல் துஸ்பிரயோகம் மட்டுப்படுத்தாது உட்படுத்தப்படுகின்றன:

| | | | | |
|---|---|---|---|---|
| உடனடியான சூழலினுள் வன்முறையினைக் காண பிள்ளையினை அனுமதிக்கின்றது | அழிவு தரக் கூடிய சமூக விரேத நடத்தையில் ஈடுபடுவதற்கு பிள்ளையைக் கெடுத்தல் | அதிகப்படியான விமர்சனம், அவமதிப்பு, எதிர்மறை ஒப்பீடுகள் மற்றும் குறைபாடுகள் | அத்தியாவசிய தூண்டுதல் மற்றும் பதிலளிக்கக்கூடிய தன்மை ஆகியவற்றையுடைய குழந்தையை புறக்கணித்தல் மற்றும் இழத்தல் | பொருத்தமற்ற எதிர்பார்ப்புகள், தீங்கு விளைவிக்கும் அச்சுறுத்தல்கள் மற்றும் நிராகரிப்பு |
| குழந்தையை சாதாரண சமூக அனுபவங்கள் மற்றும் நட்புகளிலிருந்து | குழந்தையின் தேவைகளின் நியாயத்தன்மையை புறக்கணித்தல் | குழந்தையின் மதிப்பை ஒப்புக்கொள்ள மறுப்பது மற்றும் குழந்தையின் தேவைகளின் | உணர்வு ரீதியான வளர்ச்சியைக் கட்டுப்படுத்தல் மற்றும் புலமை சார் விருத்தி | கத்துதல், வாய்மொழி தாக்குதல்கள், சத்தியம் செய்தல் மற்றும் கொடுமைப்படுத்துதல், பயப்படத்தக்கதாக சூழ்நிலையை |

| | | | | |
|---|---|---|---|---|
| தனிமைப்படுத் துதல் | | நியாயத்தன்மை யை நிராகரித்தல் | | உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் பயத்தினை ஏற்படுத்தல் |

உணர்ச்சி / உளவியல் துஷ்பிரயோகத்தின் சாத்தியமான குறிகாட்டிகள்* :

- படுக்கையினை ஈரமாக்கல் மற்றும் / அல்லது வயிற்றுப்போக்கு
- விளைவுகளைக்கண்டு பயம் ( பொய் சொல்ல வழிவகுக்கும் )
- தேல்விகளைக் கண்டு பயம்
- அடிக்கடி உள ரீதியான முறைப்பாடுகள், தலைவலி, வயிற்று வலி, குமட்டல்
- குறைந்தளவிலான சுய மரியாதை, மன அழுத்தம்
- மன அல்லது உணர்வு ரீதியான வளர்ச்சியில் பின்தங்கியிருத்தல்
- மனநிலை மாற்றம், பின்வாங்குதல், ஆக்ரோஷம்
- சமுக ரீதியான தனிமைப்படுத்தல்

*இதிலுள்ள குறிகாட்டிகள் அல்லது அவை தாமாகவே துஸ்பிரயோகத்தையோ அல்லது கவனயீனத்தையோ உள்ளடக்காது. ஏனைய குறிகாட்டிகளுடன் இணைந்தும், அவற்றுடன் தொடர்புபட்டும் அவர்களின் பரிந்துரைகளுக்கு உத்தரவாதமளிக்கப்படலாம்*

கவனயீனம் என்பது குடும்பத்திற்கு நியாயமாகக் கிடைக்கக்கூடிய சிறுவரின் அடிப்படை உடலியல் அல்லது உடலியல் தேவையை அடைவதற்கான காலக்கிரமமற்ற அல்லது தொடரச்சியான தேல்வியாகும். கவனயீனம் மட்டுப்படுத்தாது உட்படுத்தப்படுகின்றது:

**கவனயீனத்தின் சாத்தியமான குறிகாட்டிகள்***

| | | |
|---|---|---|
| கைவிடப்படல்: நியாயமான காலத்தை விட அதிகமான காலத்திற்கு சிறுவர் பராமரிப்பை வழங்குபவரிடம் விடப்படும் போது, மாற்று வயதுக்குத் தகுந்த பாதுகாப்பு இருப்பைக் வழங்காமை | கல்விசார் கவனயீனம்: கல்வி மற்றும் கல்வி முறையில் பங்குபற்றுவதற்கு தேவைப்படுத்தப்படும் கருவிகள் ஆகியவற்றை வழங்குவதற்கு பராமரிப்பு வழங்குநர் தவறுவதன் மூலமான வகைப்பாடு | உணர்வு ரீதியான கவனயீனம்: பராமரிப்பாளரின் அரவணைப்பு, வளர்ப்பு, ஊக்கம் மற்றும் ஆதரவு; உணர்வு ரீதியான தனிமை ஆகியவற்றின் குறைபாட்டின் மூலமான வகைப்பாடு |
| வைத்திய ரீதியான கவனயீனம்: பராமரிப்பு வழங்குநர் உரிய வைத்திய பாராமரிப்பை வழங்கத் தவறுவதன் மூலம் வகைப்படுத்தப்படுகின்றது; நோயின் அல்லது நிலைமையின் தீவிரத் தன்மையினை உடன்பட மறுத்தல், அல்லது பொருத்தமான கவனிப்பை வேண்டுமென்றே நிறுத்தி வைப்பதன் மூலம் இடம் பெறலாம் | உடல் ரீதியான கவனயீனம்: பாதுகாப்பு, தூய்மை மற்றும் தேவையான உடை, இருப்பிடம், உணவு மற்றும் ஆரோக்கியப் பராமரிப்பு, சுகாதாரக் குறைபாடு ஆகிய அடிப்படை உடற் தேவைகளை வழங்குவதற்கு பராமரிப்பு வழங்குநர் தவறுவதன் மூலம் வகைப்படுத்தப்படுகின்றது | மேற்பார்வை ரீதியான கவனயீனம்: உடல் ரீதியான பாதிப்பு அல்லது காயம், பாலியல் துஷ்பிரயோகம் அல்லது வயதான குழந்தையின், குற்றவியல் நடத்தைக்கு வழிவகுத்தல் ஆகியவற்றுக்கு இட்டுச் செல்ல பெற்றோர் அல்லது சட்டப் பராமரிப்பாளர் மூலமான மேற்பார்வைக் குறைபாடு, மேற்பார்வை இன்மை அல்லது கவனஞ் செலுத்தாமை மூலம் வகைப்படுத்தப்படுகின்றது |

- பிள்ளை தொடர்ச்சியாக கவனத்தை அல்லது பாசத்தைக் கோருதல்
- பிள்ளை வீட்டிற்குச் செல்ல விரும்பாமை, வீட்டில் தனிமையாகவும், பராமரிப்பின்றியும் உணருதல்
- பிள்ளைக்கு பசி அல்லது பிள்ளை போதியளவில் உடையணியாமை அல்லது கழுவாமை
- அவசர வேளைகளின் போது பெற்றோரினால் அடையமுடியாதிருத்தல்
- பாடசாலையிலிருந்து மீண்டும் மீண்டும் மேற்கொள்ளும் தொடர்பாடலிற்கு பெற்றோர் பதிலளிக்காமை
- பெற்றோர் பிள்ளைகளின் கல்வி சார் செயற்பாடுகளின் மீது ஆர்வங்காட்டமை

- வழக்கமாகப் பிள்ளை தொடர்ச்சியான சோர்வு அல்லது கவனமின்மையைக் காட்டுகிறது
- பிள்ளை வழமையாக கவனமின்மை அல்லது சோர்வினைக் காட்டுகின்றது
- பிள்ளை தனது விருத்தியில் தாமதத்தைக் காட்டுதல்
- பாடசாலையில் ஒழுங்கற்ற வருகை அல்லது சமுகமளிக்காமை
- மற்றவர்களில் நம்பிக்கைப் பொறுப்புக் குறைபாடு
- 24 மணித்தியாலங்களுக்கு மேலாக பெற்றோர் அல்லது சட்டப் பாதுகாவலர் வராதிருத்தல்
- சுய அழிவு நடத்தைகள்
- உடன் வருவதற்கு யாருமற்ற மருத்துவ அல்லது பல் தேவை

**இதிலுள்ள குறிகாட்டிகள் அல்லது அவை தாமாகவே துஸ்பிரயோகத்தையோ அல்லது கவனயீனத்தையோ உள்ளடக்காது. ஏனைய குறிகாட்டிகளுடன் இணைந்தும், அவற்றுடன் தொடர்புபட்டும் அவர்களின் பரிந்துரைகளுக்கு உத்தரவாதமளிக்கப்படலாம்.*

**OSC இன் கொள்கைகள் தொடர்ச்சியாகப் பிள்ளையுடன் வாழவிருக்கும் பெற்றோர் அல்லது சட்ட பராமரிப்பாளரைத் தேவைப்படுத்துகின்றது. பெற்றோர்/சட்ட பராமரிப்பாளர் 24 மணித்தியாலங்களை விட அதிகமான நேரத்திற்கு குடும்ப வீட்டினை விட்டு வெளியேறியிருப்பின், அக் காலப்பகுதியில் பிள்ளையுடன் வசிக்கும் தற்காலிக பராமரிப்பாளர் பற்றி பாடசாலைக்கு அறிவிக்கப்படல் வேண்டும். குறிப்பிடத்தக்க காலத்திற்கு பாதுகாவலருடன் மாணவர்கள் விடப்படுவதற்கு OSC ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்பதுடன் பராமரிப்பின் எதிர்பார்ப்பினை பெற்றோர் அடையாதுவிட்டால் குழந்தையின் சேர்க்கையை மதிப்பாய்வு செய்யலாம்.**

பாலியல் துஸ்பிரயோகம் என்பது பிள்ளை அறிவிக்கப்பட்ட சம்மதத்தினை வழங்குவதற்கு இயலாத, அவர்களால் முழுமையாகப் புரிந்து கொள்ளமுடியாத, அல்லது சட்டம் அல்லது சமுகத்திலுள்ள சமுகத் தடைகளை மீறும் பாலியல் செயற்பாட்டில் ஈடுபடுவதைக் குறிக்கின்றது. பாலியல் துஷ்பிரயோகம் என்பது குற்றவாளியின் பாலியல் நடத்தைக்கான குற்றச்சாட்டு, பொறுப்பு, குற்றவுணர்வு மற்றும் அவமானம் ஆகியவற்றை ஏற்றுக்கொள்வதன் மூலம் பாதிக்கப்பட்டவரில் விளையும் திட்டமிடல் அல்லது சீர்ப்படுத்தல் என்பதாகும். இது தத்துவ வேறுபாடுகள் இருக்குமிடங்களிலும் மற்றும் தத்துவம், பொறுப்பு, நம்பிக்கைப் பொறுப்பு அல்லது அதிகாரம் ஆகியவற்றின் நிலையில் வயதுவந்தவர் அல்லது வயதான பிள்ளையின் தேவைகளைத் தணிக்க அல்லது திருப்திப்படுத்த எண்ணும் செயற்பாடுகளுடனும் குறிப்பாகத் தொடர்புபடுகின்றது. ( *சிறுவர் துஸ்பிரயோகத் தடுப்புப் பற்றிய ஆலோசனை அறிக்கை, ஜெனிவா, 1999 மார்ச் 29-31, உலக சுகாதார அமைப்பு, சமுக மாற்றம் மற்றும் மனநல சுகாதாரம், வன்முறை மற்றும் காயத் தடுப்பு*). பாலியல் துஸ்பிரயோகம் உள்ளடக்கப்படும் ஆனால் பின்வருவன மட்டுப்பாடின்றி உட்படுத்தப்படுகின்றன:

| | | | |
|---|---|---|---|
| பாலியல் உள்ளடக்கம், இணையம் அல்லது வேறுவகையான வயர்ச்சியடையாத பொருத்தமற்ற உரையாடல்கள் | இணையவழியில் அல்லது வேறுவழியில் விபச்சாரத்திற்கு அல்லது வேறு சட்டவிரோத பாலியல் நடவடிக்கைளுக்கு சிறுவர்களைச் சுரண்டல் | இணையவழியில் அல்லது வேறுவழியில் பாலியல் செயல்கள், பிறப்புறுப்புகள் அல்லது ஆபாசங்களை பார்க்க கட்டாயப்படுத்தல் | சுகாதாரம் அல்லது குழந்தை பராமரிப்பு நோக்கங்களுக்காகத் தவிர வேறு காரணங்களுக்காக நேரடியாகவோ அல்லது ஆடை மூலமாகவோ, பிறப்புறுப்புகள், ஆசனவாய் அல்லது மார்பகங்களை வேண்டுமென்று தொடுதல் |
| குழந்தைகள் மீது பாலியல் ஆர்வம் இல்லாத போதும் சிறுவர்களுக்கு எதிரான சுரண்டல்களை சமுக ஊடகங்களினூடாக இணைய வழியில் வளர்த்தல் அல்லது செயற்படுத்தல் உற்பத்தி செய்தல், அல்லது தொந்தரவு செய்தல் | இணையத்தில் அல்லது வேறுவழியில் எதிர்காலச் செயற்பாடுகளுக்காக பிள்ளையை பாலியல் செயல்களுக்காகத் திட்டமிடல் அல்லது சுரண்டல் | தெளிவான அல்லது தெளிவற்ற பாலியல் செயற்பாடுகள், பாலியல் ரீதியான உடலுறவு, குத அல்லது வாய்வழி பாலியல் செயற்பாடுகள் | இணையவழியில் அல்லது வேறுவழியில் பிள்ளைக்கு ஒருவர் ஆடையின்றி தோன்றுதல் அல்லது வெளிப்படுத்தல் |

*பாலியல் துஸ்பிரயோகத்தின் சாத்தியமான குறிகாட்டிகள் *:*

- படுக்கையை ஈரப்படுத்தல்
- நடத்தை சார்./ உணர்வு சார் தொல்லைகள்
- "ரகசிய, சிறப்பு" நண்பரைக் குறிப்பிடும் குழந்தை
- நடப்பதில் அல்லது இருப்பதில் சிரமம்
- உடல் நலக் குறைவு அல்லது வாய்வழி, பிறப்புறுப்பு அல்லது குத பகுதிகளில் இரத்தப் போக்கிற்கான சான்றுகள்
- ஆண், பெண் இருபாலாருக்கும் சிறுநீர்ப் பாதையில் அடிக்கடி கிருமித் தொற்று
- அவர்களால் வேறு யாரிடமும் சொல்ல முடியாத இரகசியங்களைக் கொண்டிருத்தல்
- தனிநபருடன் தனிமையில் இருக்க விரும்பாமை
- கர்ப்பம் தரித்தல், விசேடமாக இள வயதில்
- PE ஆடைகளுக்கு மாறுவதற்குத் தயக்கம், குளியலறை பாலியல் அறிவுப் பயம், வயதிற்கேற்ற நடத்தை அல்லது மொழி இன்மை
- எந்த வயதிலிருக்கும் பிள்ளைக்கும் தொற்றக்கூடிய பாலியல் ரீதியான தொற்று
- வழக்கத்திற்கு மாறான உறவுமுறை மாதிரி

**இதிலுள்ள குறிகாட்டிகள் அல்லது அவை தாமாகவே துஸ்பிரயோகத்தையோ அல்லது கவனயீனத்தையோ உள்ளடக்காது. ஏனைய குறிகாட்டிகளுடன் இணைந்தும்,*

*அவற்றுடன் தொடர்புபட்டும் அவர்களின் பரிந்துரைகளுக்கு உத்தரவாதமளிக்கப்படலாம்*

ஒரே வயதினரால் பாலியல் துஸ்பிரயோகம் (**Peer-on-Peer Abuse**) என்பது ஒரே வயதினர் வகுப்பினுள் Peer உள்ள இடங்களில் அவர்கள் தாமாகவே தம்மை வெளிப்படுத்த முடியும். இதில் பாலியல் கொடுமைப்படுத்துதல், பாலியல் படங்களை அனுப்ப கட்டாயப்படுத்தப்படுதல், பாலியல் வன்கொடுமை, பதின்ம வயது உறவுத் துஸ்பிரயோகங்கள் ஆகியன உள்ளடக்கப்படும். ஒரே வயதினரால் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு பாதிக்கப்பட்ட அல்லது துன்புறுகின்ற OSC மாணவர் எவரேனும் உள்ளடக்கப்பட்டிருப்பின், OSC நடத்தைக் கொள்கையில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளுக்கிணங்க நிர்வகிக்கப்படுவார்.

## சந்தேகிக்கப்படும் துஸ்பிரயோகத்திற்கான பதில்

அனைத்து ஊழியர், பீடம் மற்றும் நிர்வாகத்தினர் துஸ்பிரயோக சம்பவங்கள் அல்லது சந்தேகங்கள் பற்றி அறிக்கையிடத் தேவைப்படுத்தப்படுகின்றனர். அனைத்து அறிக்கைகளும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு உடனடியாக குறிப்பீடு செய்யப்படுவதுடன், 24 மணித்தியாலங்களினுள் புலனாய்வுகள் ஆரம்பிக்கப்படும். தகவலைத் திரட்டும் பொருட்டு சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் பின்வருவனவற்றை மேற்கொள்ளலாம்:

- ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்தல்
- பிள்ளையை அவதானித்தல் அல்லது அவ்வாறு செய்ய நபரொருவரிடம் ஒப்படைத்தல்
- அதிக தகவலைப் பெற்றுக்கொள்வதற்கு பிள்ளையுடன் கதைத்தல்
- பிள்ளையை எழுத, வரைய அல்லது நாடகம் நடிக்கச்செய்தல்
- பரிசேதனைக்காக வைத்தியர்/ தாதியிற்கு குறிப்பீடு செய்தல்
- OSC இன் சம்மதத்தினை சமர்ப்பிக்குமாறு பெற்றோருடன் ஆலோசனை செய்தல்

நிகழ்வு ரீதியாக அனைத்து தகவலும் ஆவணப்படுத்தப்படும் என்பதுடன் அந்தரங்கம் கடுமையாக பராமரிக்கப்படும். நியாயமான காரணம் இருக்கும் போது, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் பாடசாலைத் தலைமைத்துவத்திற்கு இவை தொடர்பாக தொடர்பாடலை மேற்கொள்ளும் அதிபர் அவர்களுக்கு அறிவிப்பார். சிறுவர் பாதுகாப்பு விடயங்களுக்கு பதிலளிக்கும் குழு (CPCRT) பின்வருவோரை உள்ளடக்கியதாக உருவாக்கப்படும்:

- பாடசாலைத் தலைவர்
- அதிபர்
- உதவி அதிபர்
- ஆலோசகர்
- வைத்தியர்/ தாதி
- வகுப்பறை ஆசிரியர் அல்லது அறிவுரை வழங்குநர்

அனைத்து சாத்தியமான தெரிவுகளைத் தீர்மானிக்கும் பாடசாலைத் தலைமைத்துவத்திற்கு புலன்விசாரனை தொடர்பான அடுத்த படிகள் பற்றி CPCRT அறிவுறுத்தலை வழங்கும்.

- சிறுவர்களின் குடும்பம்

- இலங்கை அதிகாரசபைகள்
- பெற்றோர்/ பாதுகாவலர் உயர்ஸ்தானிகராலயம்/ உயர்ஸ்தானிகர்
- பெற்றோர்/ பாதுகாவலர் தொழிலாளர்
- வெளிவாரி வைத்திய சேவைகள் அல்லது வெளிவாரி ஆலோசனைச் சேவைகள்

பிள்ளை, குடும்பம், ஆசிரியர்களுக்கான ஒத்துழைப்பு இணைப்பினை அமைத்துக் கொடுப்பதற்கு பிள்ளை, குடும்பம், CPCRT உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மற்றும் வெளியிலிருக்கும் சேவை வழங்குநர்கள் ஆகியோருடன் தொடர்புகளை ஆலோசகர் பராமரிப்பார். சிறுவர் துஸ்பிரயோகம் சம்பந்தமான அனைத்து விடயங்களும் சிறுவரின் அந்தரங்கமான கோவையில் ஆவணப்படுத்தப்பட்டு களஞ்சியப்படுத்தப்படும். OSC இலிருந்து வேறு பாடசாலைக்கு பிள்ளை மாற்றப்படும் போது பிள்ளையினைப் பாதுகாக்கும் பொருட்டு ஆலோசகரிடமிருந்து ஆலோசகருக்கான அந்தரங்கத்தைக் கொண்டிருப்பதற்கான ஒவ்வொரு முயற்சியையும் ஆலோசகர் மேற்கொள்ள வேண்டும்.

## துஸ்பிரயோகத்தை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கான பதில்

முதல் பிரதிபலிப்பானது நம்பிக்கையீனமானதாக இருப்பினும் கூட துஸ்பிரயோகத்தை பிள்ளை வெளிப்படுத்தும் போது பிள்ளை கூறும் விடயங்களை நம்புவதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சிறுவர் துஸ்பிரயோக அனுபவத்தை குறிப்பாக பாலியல் துஸ்பிரயோகத்தை மேற்கொள்வது மிகக் குறைவாகும். பிள்ளை துஸ்பிரயோகத்தை வெளிப்படுத்தும் விடயத்தில் அனைத்து OSC ஊழியர்கள், பீடம் மற்றும் நிர்வாகத்தினர் பின்வரும் படிமுறைகளைப் பின்பற்ற எண்ணுதல் வேண்டும்:

- பிள்ளை, கதை, பயம், அக்கறை மற்றும் தேவைகளைக் கேட்டல்
- இந் நிலையில் விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக வினாக்களைக் கேட்டல் கூடாது
- பிள்ளைக்கு ஒத்துழைத்தல்/ அதிகாரம் வழங்குதல்
- பிள்ளை பாதிப்படைந்துள்ளமையை உறுதிப்படுத்தல் அத்துடன் உதவியற்றவர் மற்றும் அதிகாரமற்றவராக உணரலாம் என்று பிள்ளையை பழி கூறுதல் கூடாது.
- யாரிடமும் சொல்ல மாட்டேன் என பிள்ளைக்கு சத்தியம் செய்ய வேண்டாம்; அனைத்து OSC உத்தியோகத்தர்கள், பீடம் நிர்வாகத்தினர் ஆகியோர் துஸ்பிரயோகம் பற்றி அறிக்கையளிக்க ஒப்பந்த ரீதியாக மற்றும் ஒழுக்க ரீதியாக தேவைப்படுத்தப்படல்.
- உடனடியாகத் துஸ்பிரயோகம் பற்றி அறிக்கையிடுவதற்கு உங்களிற்கு உதவுவதற்கு பிள்ளையை அழைத்தல்
- துஸ்பிரயோகத்தை வெளிப்படுத்துவதன் மூலம் பாதிக்கப்பட்டதை நீங்களாகவே கண்டுபிடித்திருப்பின் ஒத்துழைப்பிற்கு நாடல் அத்துடன்/ அல்லது ஆலோசனை வழங்குதல்

  துஸ்பிரயோகம் என சந்தேகிக்கப்படும் விடயங்களை தொடர்ந்தும் கண்காணிப்பதற்கான பரிந்துரைகளை CPCRT மேற்கொள்ளும். பிள்ளை, குடும்பம், பாடசாலை மற்றும் சமூகம் ஆகிய மாறுபட்ட விடயங்களை உள்ளடக்கிய

பல்வேறுபட்ட பிரச்சினைகள் சிறுவர் துஸ்பிரயோகமாகும். அனைத்து மட்டங்களிலும் பதிலளிப்பதற்கு OSC சிறுவர் பாதுகாப்புக் கொள்கை பணிபுரிகின்றது.

## பாதுகாப்புப் பயிற்சி

OSC வருடாந்த அடிப்படையில் ஊழியர்களின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் குறிப்பான வகிபங்கினைப் புதுப்பிக்க ஈடுபாடு கொண்டுள்ள காரணத்தினால் தங்களது பொறுப்புக்களைப் புரிந்துகொள்ளுவதற்கும், எதிர்பார்க்கப்படும் நடைமுறைகளுக்கு பழக்கப்படவும் மாணவர்களுடன் அவர்கள் அனைவரும் பணிபுரிகின்றனர்.

## இடர் மதிப்பீடு

மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் இடர்களை உள்ளடக்கி OSC மேற்கொண்ட தீர்ப்புகளைக் கொண்ட அனைத்து செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் இடர் மதிப்பீட்டினுள் உள்ளடங்கும்.

## வயதுவந்த விருந்தினருக்கான வழிகாட்டல் மற்றும் நடத்தைக் கோவை

- OSC பரஸ்பர மரியாதை செலுத்தும் கலாச்சாரத்திற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது; அனைத்துத் தொடர்பாடல்களும் நேர்மறையானவை, மரியாதைக்குரியன மற்றும் அனைத்தையும் உள்ளடக்கியன.
- எல்லா நேரங்களிலும் முக்கியமான ‘விருந்தினர் அனுமதிச் சீட்டை’ விருந்தினர்கள் காட்டுதல் வேண்டும்.
- புகைப்படங்கள் அல்லது வீடியோக்கள் எடுப்பதற்கு முன்னர் OSC இன் அனுமதி வழங்கப்படல் வேண்டும்; ஏதேனும் சமுக வலைதளங்கள் அல்லது இணைய அமைப்புக்களில் மாணவர்களின் புகைப்படங்கள் பகிரப்படல் கூடாது; அனுமதிக்கப்பட்ட காரணம் நிறைவடைந்த பின்னர் மாணவர்களின் புகைப்படங்கள் எவையும் அழிக்கப்படல் வேண்டும்.
- வயதுவந்தவர்களுக்காக மட்டும் காணப்படும் கழிப்பறைகளை விருந்தினர்கள் பயன்படுத்தலாம்; மாணவர்களின் கழிப்பறைகள் பயன்படுத்தப்படுவது அனுமதிக்கப்பட மாட்டாது.
- அனுமதி வழங்கப்பட்டால் தவிர விருந்தினர்கள் மாணவர்கள் எவரிடமுமிருந்து தனிப்பட்ட தகவலை எடுக்கவோ அல்லது எவரேனும் மாணவருக்கு தொடர்புகொள்ளல் விபரம் மற்றும் சமுக ஊடக விபரம் ஆகியன உட்பட தனிப்பட்ட தகவலை வழங்கவோ கூடாது.
- விருந்தினர்கள் மாணவர் எவருடனும் தனிமையில் இருக்கவோ அல்லது எவரேனும் மாணவர்களைத் தொடவோ அல்லது மாணவர்களின் தனிப்பட்ட இடங்களுக்கோ ஒருபோதும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- விருந்தினர்கள் மாணவர்கள் எவரிடமுமிருந்து வரும் உடல் ரீதியான தொடர்புகளுக்கு பதிலளித்தல் கூடாது; தொடர்பு இடம்பெறின், விருந்தினர்கள் உடனடியாக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு அறிக்கையிடல் வேண்டும்.
- எவரேனும் மாணவர் அல்லது வயது வந்தவர்களுக்கிடையிலான அத்துடன்/அல்லது உடல் அல்லது வாய்மொழி மூலமான துஸ்பிரயோகம் உள்ளடங்கலாக

சந்தேகத்திற்கிடமான அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தைகள் பற்றி விருந்தினர்கள் அறிக்கையிடல் வேண்டும்.

**பாரபட்சமற்ற கொள்கை**

பாகுபாடு இல்லா கொள்கை OSC ஆனது, அந்த நபரின் இனம், மதம், பாலினம் (பாலின அடையாளம் மற்றும் பாலியல் நோக்குநிலை உட்பட) அல்லது தேசிய பூர்வீகம் ஆகியவற்றின் அடிப்படையில் எந்தவொரு மாணவர் அல்லது பணியாளருக்கும் சட்டவிரோதமான பாகுபாடு இல்லாத ஒரு பள்ளியை பராமரிக்க உறுதிபூண்டுள்ளது. இத்தகைய பாகுபாடு ஏற்றுக்கொள்ளப்படாது, ஏனெனில் இது பள்ளியின் பயனுள்ள செயல்பாட்டிற்கு தேவையான இணக்கமான உறவுகளை பாதிக்கிறது. பள்ளி மாணவர்களும் ஊழியர்களும் பாகுபாடு இல்லாத சூழலில் படிக்கவும் வேலை செய்யவும் உரிமை உண்டு. இனம், மதம், பாலினம் (பாலின அடையாளம் மற்றும் பாலியல் நோக்குநிலை உட்பட) அல்லது தேசிய வம்சாவளியின் அடிப்படையில் பாகுபாடு அல்லது துன்புறுத்தல் செய்யும் எந்தவொரு OSC ஊழியர், மாணவர் அல்லது சங்கத்தின் உறுப்பினர், திருத்தம்/ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட்டவராக இருக்கலாம். ஒழுக்காற்று நடவடிக்கைகளில் தகுந்த விசாரணை மற்றும் பதிலளிப்பதற்கான வாய்ப்பு ஆகியவை அடங்கும். பள்ளித் தலைவர் இந்தக் கொள்கை புரிந்து கொள்ளப்படுவதையும், கடைப்பிடிக்கப்படுவதையும், நடைமுறைப்படுத்தப்படுவதையும் உறுதிசெய்து, புகார்களை உடனுக்குடன் விசாரித்து, தேவையான திருத்தம்/ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கான செயல்முறையை நிறுவ வேண்டும்.

## கொள்கை அமுலாக்கம்

சிறுவர் பாதுகாப்புக் கொள்கை அமுலாக்கத்திற்கு பாடசாலைத் தலைமைத்துவம் பொறுப்பாகவிருக்கும் என்பதுடன் இக் கொள்கை முழுமையாக நிறைவேற்றபடுகின்றது என்பதை அதிபர்களுடன் இணைந்து சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் உறுதி செய்தல் வேண்டும்.

## உசாத்துணை

"Child Maltreatment." *World Health Organization*, WHO, www.who.int/news-room/fact-sheets/detail/child-maltreatment.

*Child Safeguarding*. *United World College Southeast Asia*, drive.google.com/file/d/0B16_bfAqPl9TZm1lakhTWjNScXJ6am96ZWFlWTRSUFZrLUkw/view.

"Child Safe Organisations." *Commissioner for Children and Young People, Western Australia*, www.ccyp.wa.gov.au/our-work/resources/child-safe-organisations/.

"The Convention." *Child Rights International Network*, CRIN, zarchive.crin.org/en/home/rights/convention.html.

*Convention on the Rights of the Child*. United Nations Human Rights Office of the High Commissioner, 20 Nov. 1989. *United Nations*, www.ohchr.org/en/professionalinterest/pages/crc.aspx. Accessed 4 June 2019.

Council of International Schools. *Council of International Schools*, https://www.finalsite.com/, www.cois.org/.

"Education Portal." *International Centre for Missing and Exploited Children*, ICMEC, www.icmec.org/education-portal/.

"https://www.keepingchildrensafe.org.uk/." *K eeping Children Safe (UK)*, KCS, www.keepingchildrensafe.org.uk/.

*International Safeguarding Standards: Recruitment and Screening Practices*. Council of International Schools, 29 May 2016. *C ouncil of International Schools*, resources.finalsite.net/images/v1543573914/cis/antsvzqr0yb8aoclkbj9/Recommended-Recruitment-and-Screening-Practices.pdf. Accessed 4 June 2019.

Larsson, Jane, compiler. *Final Report and Recommendations*. Council of International Schools, May 2016. *International Task Force on Child Protection*, www.icmec.org/wp-content/uploads/2016/08/New-Standards-for-Child-Protection-Adopte d-by-School-Evaluation-Agencies-2.pdf. Accessed 4 June 2019.

Perera, Amantha. "New Laws May Fail to Protect Children in Sri Lanka." *I nter Press Service*, IPS-Inter Press Service, 9 Oct. 2013, www.ipsnews.net/2013/10/new-laws-may-fail-to-protect-children-in-sri-lanka/. Accessed 4 June 2019.

Peters, Jean Koh, compiler. *Representing Children Worldwide: How Children's Voices are Heard in Child Protective Proceedings*. New Haven, Yale University, 1 Dec. 2005. *Y ale University*, rcw.law.yale.edu/. Accessed 4 June 2019.

Ryall, Chanel, editor. *C hild Protection Handbook, Version 2*. Association of International Schools in Africa, 2016. *I nternational Centre for Missing and Exploited Children*, www.icmec.org/wp-content/uploads/2017/03/AISA-CP-Handbook-2016.pdf.

"United World College Southeast Asia." *C hild Safeguarding*, Google Sites, sites.google.com/gapps.uwcsea.edu.sg/safeguarding/home?authuser=0.